## வவுனியா ராணுவ பாவனையில் நல்லூர் கூட்டுறவு லொறி

வவுனியாவில் இராணுவத்தினர் வடபகுதி கூட்டுறவுச் சங்க லொறிகள் சிலவற்றை தமது பாவனைக்காக தடுத்து வைத்திருப்பதால் ஏனைய லொறிகள் கொழும்பு செல்ல அச்சம் தெரிவிக்கின்றன. நல்லூர் பல நோ. கூ. சங்க லொறி தற்போது அவர்களின் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல சில தினங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்க லொறியும் இவ்வாறு உபயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது. — 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் பழுதான பருப்பு நிவாரணம்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையில் இராணுவ நடவடிக்கையால் கணவனை இழந்த நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவருக்கு நிவாரணம் இல்லை எனக் கூறப்பட்டதாம். கோண்டாவிலைச் சேர்ந்த அந்த விதவை மீண்டும் தனது குடும்ப நிலைமையைக் கூறி நிவாரணம் தருமாறு இரந்து கேட்டதைத் தொடர்ந்து ஒரு கிலோ பருப்பு வழங்கப்பட்டது. ஆனால் அந்தப் பருப்பு பாவிக்க முடியாது பழுதடைந்திருந்ததாக அப் பெண் எமது நிருபரிடம் கவலையுடன் கூறினார். (74)

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 134 பிரமோதூத பங்குனி 27 (10-04-1991) புதன்

## கறையானுக்கு இரையாகும் பாடசாலைப் புத்தகங்கள்

வவுனியா பாடசாலைகளுக்கு வழங்கவென கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட பாடசாலைப் புத்தகங்களை கறையான் அரிக்கின்றது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நகருக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு வழங்கவென சைவப் பிரகாச வித்தியசாலையில் வைக்கப்பட்ட புத்தகங்களே கறையானுக்கு இரையாகிவருகின்றன. இதையடுத்து கல்வி அதிகாரிகள் செயலக அதிகாரிகள் தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியால் இம்மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் இப்புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

# மன்னார்: பல முனைகளில் சமர்

# பேசாலையில் 9 பொலிஸார் பலி!

### மாந்தையில் அவ்ரோ குண்டு வீச்சு

மன்னாரில் பல முனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் ஆரம்பித்துள்ளன. தலைமன்னாரில் இருந்து மன்னார் நகருக்கு தமது வாகனத்தில் சென்று திரும்பிய பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் பேசாலை, துள்ளுக்குடியிருப்பில் வைத்துக் கடும் தாக்குதல் நடாத்தினர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதலில் இன்ஸ்பெக்ரர் ஒருவர் உட்பட ஒன்பது பொலிஸார் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். இவர்கள் சென்ற ஜீப் தீக்கிரையானது.

பொலிஸாரிடமிருந்து ரி-56I-1, ரவைக்கூடு-8' 84 எல் ரக துப்பாக்கி-4. ரவைக்கூடு-12, 84 எல்-II-1. 5 56 ரக ரவை-500, 7.62 ஐ.ம் ரவை-220, தொலைத்தொடர்பு சாதனம்-1 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேதினம் தாளாட்டா'வில் இருந்து முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலினால் படையினர் தமது முகாமுக்குத் திரும்பி விட்டனர்.

வங்காலை முகாமில் இருந்த வாகனங்களுடன்

—04 ஆம் பக்கம் பார்க்க

### அன்னை பூபதி நினைவஞ்சலி கூட்டம்

மறுமலர்ச்சிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 11 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

### வருத்தம் கடுமை வயோதிபர் தற்கொலை

சோறி, இரமிகு வருத்தம் தாங்கமுடியாத க. சுப்பிரமணியம் (80) என்ற வயோதிபர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ள சம்பவம் புங்குடுதீவு கிழக்கில் நிகழ்ந்துள்ளது. 20

### சிறுவன் மீது பாலியல் வன்முறை பிரயோகித்த பெண்கள்!

மூன்று இளம் பெண்களின் பாலியல் வன்முறையால் காயமடைந்த நிலையில் பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இச்சிறுவன் மீது

—04 ஆம் பக்கம் பார்க்க

### சுடுமணலினுள் அகப்பட்டு ஒன்பது மாதக் குழந்தை பலி

சுடுமணலுக்குள் அகப்பட்ட ஒன்பது மாதக் குழந்தையொன்று துடிதுடித்து உயிரிழந்த சம்பவம் பூநகரி வினாசியோடையில் இடம்பெற்றது.

... சென்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குழந்தை நித்திரை விட்டு எழுந்து தாயைத்தேடி அழுது தவழ்ந்து தவழ்ந்து முற்றத்துக்கு வந்தது.

### கேரதீவில் ஹெலி சூடு

நேற்றுக் காலை 6 30 மணியளவில் திடீரென வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று கேரதீவுப்பகுதியில் தாக்குதலைத் தொடுத்தது. சேத விபரம் தெரிவிக்கப்படவில்லை. (ப 11)

### காரைநகரில் கடும் ஷெல் வீச்சு தாயும் மகளும் பலி; 4பேர் காயம்

நேற்று பகல் 9. பிளேன் ஒன்றும் அவ்ரோ விமானம் ஒன்றும் காரைநகரைப் பலதடவைகள் வட்டமிட, காரைநகர் கடற்படை முகாமிலிருந்து சரமாரியான கனரக தாக்குதலும் தொடர்ச்சியான ஆட்லறி ஷெல் தாக்குதலும் இடைவிடாது நடாத்தப்பட்டன.

கடற்படையினரின் இவ் ஆட்லறி ஷெல் தாக்குதல் பலகாடு, வியாவில், கருங்காலி, களபூமி, சத்திரந்தைப் பகுதிகளை நோக்கி நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலில் திக்கரை முருக மூர்த்தி கோவில் பகுதியில் விழுந்த ஷெல் ஒன்றினால் வீடு பார்க்கச் சென்ற களபூமி பாலாவோடையைச் சேர்ந்த சண்முகம் நவமணி (வயது 52), அமிர்தலிங்கம் சந்திரமலர் (வயது 23) ஆகி

—04 ஆம் பக்கம் பார்க்க

கடு மணலுக்குள் அகப் பட்ட ஒன்பது மாதக் குழந் தையொன்று துடிதுடித்து உயிரிழந்த சம்பவம் பூநகரி வினாசியோடையில் இடம் பெற்றது.

குழந்தை பகல் நித்திரை யாக இருந்தபோது தாயார் மூத்த பிள்ளையுடன் வீட்டுச் சென்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குழந்தை நித்திரை விட்டு எழுந்து தாயைத்தேடி அழுது தவழ்ந்து தவழ்ந்து முற்றத் துக்கு வந்தது.

முற்றத்தில் வெயிலுக்கு மணல் கொதித்தபடி இருந்

—04 ஆம் பக்கம் பார்க்க

ஹெலிக்கொப்டர் ஒன்று கேர தீவுப்பகுதிகளில் தாக்கு தலைத் தொடுத்தது சேத விவரம் தெரிவிக்கப்பட வில்லை (ப 11)

ஒன்றும் காரைநகர்ப்பகுதியில் வைகள் வட்டமிட்டு, காரை நகர் கடற்படை முகாமிலி ருந்து சரமாரியான ஷெல் தாக்குதலும் தொடர்ச்சி தப்பட்டன.

கடற்படையினரின் இவ் ஆட்லறி ஷெல் தாக்குதல் பலகாடு, வியாவில், கருங் காலி, களபூமி, சத்திரந்தைப் பகுதிகளை நோக்கி நடாத் தப்பட்டது.

லால் வீடு பார்க்கச் சென்ற களபூமி பாலாவோடையைச் சேர்ந்த சண்முகம் நவமணி (வயது 52), அமிர்தலிங்கம் சந்திரமலர் (வயது 23) ஆகி

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச செயலாளர்களுக்கு ஆயிரம் ரூபா மேலதிகப்படி

கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் உள்ளூராட்சி சபைப் பிரதேச செயலாளர் களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபாவை மேலதிக கொடுப்ப னவாக வழங்க பொது நிர் வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதனை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ள

—04 ஆம் பக்கம் பார்க்க

## வட கடலில் கடற்படையினர் சரமாரியாகத் துப்பாக்கிவேட்டு

சேந்தான்குளம், மாரீசன் கூடல், மாதகல் கடற்பரப் பில் கடற்படையினரால் சர மாரியான துப்பாக்கிப் பிர யோகம் செய்யப்பட்டது.

நேற்றுக்காலை 6 மணியள வில் இச்சம்பவம் நடைபெற் றது.

இத்தாக்குதல் நடைபெற்ற வேளையில் கடலில் பல கடற் தொழிலாளர்கள் காணப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 88 இலங்கை மீனவர் மீது மாலைதீவில் வழக்கு

மாலைதீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தென்னிலங் கை மீனவர்கள் மீது மாலை தீவு அரசு வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

மாலைதீவுக் கடலில் கை தான நூற்றுக்கணக்கான மீன வர்களையும் 17 படகுகளை யும் மாலைதீவு தடுத்து வைத் திருந்தது. இவர்களை விடு விக்குமாறு வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் கேட்டுக் கொண்டதற்கிணங்க 12 பேர் மட்டுமே விடுவிக்கப் பட்டனர். ஏனைய 88 மீன வர்கள் மீதும் மாலைதீவு நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தொழிலாளர் கல்வி நெறிக்கு 260 பேர் பதிவு செய்தனர்

புதிதாக யாழ் பல்கலைக் கழகத்தில் தொடங்கவுள்ள தொழிலாளர் கல்வி நெறிக்கு 125 பேர் சேர்த்துக்கொள் ளப்படவுள்ளதாக பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித் தன.

இதற்கான பரீட்சை இம் மாதம் 19 ஆம் திகதி நடை பெறுமென்றும் இதன் பின் னர் நேர்முகம் ஒன்றும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## குறிகாட்டுவான் படகுச்சேவை கடற்படையினர் கெடுபிடி

குறிகாட்டுவான் படகுச் சேவை கடற்படையினரின் கெடுபிடி தீவிர சோதனை களுடன் நடைபெறுவதால் தீவுப்பகுதி மக்கள் பயணம் செய்ய அச்சம் தெரிவிக்கின் றனர்.

இதுதொடர்பாக நயினா தீவு, நெடுந்தீவு, அனலைதீவு

—04 ஆம் பக்கம் பார்க்க

## வட்டுக்கோட்டைப் பகுதியில்

## விமானம் வட்டமிட்டதால் பெற்றோர்கள் அச்சம்

வட்டுக்கோட்டைப்பகுதியில் நேற்று நண்பகல் விமானம் ஒன்று வட்டமிட்டதையடுத்து இங்குள்ள பாடசாலைகள் பல நேரத்துடன் மூடப் பட்டன.

விமானம் வட்டமிடுவதைக் கண்ட பெற்றோர் பலர் பாட சாலைகளுக்குச் சென்று தமது பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர் களைக் கேட்டுக்கொண்டதற் கிணங்கவே பாடசாலைகள் நேரத்துடன் மூடப்பட்டன. (12)

## தமிழர் போராட்டத்தை இராணுவ ரீதியில் ஒடுக்க முடியாது என்பதை அரசு உணர்கிறது

- திலகர்

நிபந்தனைகளின்றி ஸ்ரீலங்கா அரசு பேச்சு வார்த்தை நடாத்த முன்வந் தால் அதை விடுதலைப் புலி களும் ஏற்கத்தயார் என புலி களின் பிரமுகரான லோரன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸியிக்கு அவர் அளித்த பேட்டியில், ஆயுதங்களை கைவிடல், மற்ற தமிழ் குழுக் களுடன் பேச்சு நடாத்தல், தலைவர் பிரபாகரன் பேச்சு வார்த்தையில் கலந்து கொள் வது போன்ற அரசின் நிபந் தனையை ஏற்கமுடியாது

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

குப்பிளானில் நேரடி மோத லில் வீரவேங்கை வேணு கோபால் (திருமலை) நேற்று வீரமரணமடைந்தார்.

நீர்வேலி போயிட்டி சன சமூக நிலையத்தில் இன்று காலை 10 மணிக்கு அஞ்ச லிக்காக வைக்கப்பட்டு மாலை

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக தேர்தல் களம்

### விரிசல் அகன்றது

தி.மு. கவுக்கும் ஜனதாதளத்துக்கும் இடையே தோன்றவிருந்த விரிசல் முளையிலேயே கிள்ளப்பட்டு நிலைமை சீராக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய முன்னணியில் இக்கட்சிகள் அங்கம் வகிக்கின்ற போதிலும் ஜனதாதள் தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். ஆர். பொம்மை தஞ்சாவூரில் வைத்து ஜனதாதள் தனித்துவம் வாய்ந்த தேசியக்கட்சி எனக்கூறி தி.மு. கவைச் சமீபத்தில் மறைமுகமாகச் சாடியிருந்தார்.

அவரது இக்கருத்தை தி.மு.க வன்மையாகக் கண்டித்தது. இப்போது கருத்து வேறுபாடு நீக்கப்பட்டுவிட்டது. தமது கட்சி தி.மு. கவுடனான கூட்டணியில் இணைந்து செயற்படவேண்டிய நிலைப்பாடுகள் குறித்து சில தினங்களுக்கு முன் சென்னையில் ஜனதாதள் தமிழகத் தலைவர் திரு. சிவாஜிகணேஷன் தலைமையில் கூடி ஆராயப்பட்டது. சமீபத்தில் பீகார் - பட்னாவில் நடைபெற்ற தேசிய முன்னணியின் மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் தி.மு.க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### ராஜீவின் கூற்றுக்குப்பிரதமர் பதில்

தமது கட்சி ஒன்றினாலேயே இந்தியாவில் ஸ்திரமான ஆட்சியை நடத்த முடியும் என்று இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ்காந்தி கூறியுள்ளாரே, இது பற்றி உங்கள் கருத்து என்ன? என்று பிரதமர் திரு. சந்திரசேகரிடம் செய்தியாளர்கள் வினவிய பொழுது அவர் பதிலளித்தார் இப்படி;

"அப்படியானால் 1984 இல் மிக உச்சக்கட்ட பெரும்பான்மையைப் பெற்றிருந்த காலகட்டத்தில் சிறிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நிலையான நல்லாட்சியைத்தர அவரால் முடியவில்லையே"

### பாரதீய ஜனதா 80 தொகுதிகளில்

தமிழகத்தில் பாரதீய ஜனதாக்கட்சி எண்பது சட்டசபைத் தொகுதிகளிலும், ஒன்பது லோக்சபாத் தொகுதிகளிலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை இக்கட்சியின் தமிழகத் தலைவர் திரு. வைத்திலிங்கம் தஞ்சாவூரில் வைத்து வெளியிட்டார். பாண்டிச்சேரியில் ஒரு லோக்சபைத் தொகுதியிலும் தமது கட்சி போட்டியிடும் என்றும் அவர் கூறினார்.

மதவாதத்தை அடிப்படையாக வைத்து இக்கட்சி வாக்குகள் திரட்ட முயற்சிக்கும் எனக் கூறப்படுகிறது.

### 'காங்கிரஸாரும் காகமும்'

தி.மு.க தலைவர் கலைஞர் மு. கருணாநிதியின் வருகையை எதிர்த்து இந்திரா காங்கிரஸார் மேற்கொண்ட ஓர் "புதுவித" நடவடிக்கை பற்றித் தமிழக தேர்தல் களத்தில் இப்போது பலமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது வரவேற்பு விழா ஒன்றில் கலந்துகொள்ள அவர் சென்றவேளை காங்கிரஸார் ஆயிரம் காகங்களை அவரது காருக்கு முன் பறக்க விடத் திட்டமிட்டிருந்தனர். நரிக்குறவர்களுக்கு ஒரு காகத்துக்குப்பத்துரூபாவென்றவீதப்படிகொடுத்துமுந்நூறுகாகங்களைப் பிடித்தும் விட்டார்கள். பொலிஸார் இதனையறிந்து இடையிலேயே இம்முயற்சியை முறியடித்து விட்டனர். 'காங்கிரஸாரும் காகமும்' பற்றிய இவ்விடயமும் இப்போது பிரசாரக் களத்தில் இடம்பெற்று வருகிறது.

---

## என் பெயர் கருணாநிதி நான் ஒரு தேசவிரோதி

"என் பெயர் கருணாநிதி. நான் ஒரு தேசவிரோதி!" என்று தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார் மு.க.

இடம் : பீஹார் மாநிலத் தலைநகர் பாட்னா.

சந்தர்ப்பம் : தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரத் துவக்கக் கூட்டம்.

---

### யூகோஸ்லேவியாவிலிருந்து வந்த யாழ் வாலிபர் சடலத்தை

# வவுனியா தாண்ட இராணுவம் அனுமதி மறுப்பு

யூகோஸ்லேவியாவில் மரணமுற்ற யாழ் வாலிபர் ஒருவரின் சடலம் பல்வேறு சிரமங்களின் மத்தியில் விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டும் வவுனியாவுக்கு இப்பால் சொந்த ஊருக்கு எடுத்து வர வவுனியா இராணுவம் மறுத்து விட்டதாம். இதனால் அச்சடலம் வவுனியா விமானத் தளத்திற்கு அண்மையில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

வடமராட்சியைச் சேர்ந்த சிவலிங்கம் பிரகாஸ் (வயது 19) என்ற வாலிபருக்கே சடலமாகிய பின்பும் இராணுவத்தால் இந்த அவலநிலை ஏற்பட்டது.

இதுபற்றி அவரது தந்தை மூலம் மேலும் தெரியவருவதாவது: "யூகோஸ்லேவியாவில் நோய் காரணமாக பிரஸ்தாப வாலிபர் கடந்த மார்ச் மாதம், 11 ஆம் திகதி மரணமானார். அவரது சடலம் மார்ச் 23 இல் அங்கிருந்து உரிய அனுமதி முறையுடன் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக சடலம் ஜெர்மனி, லண்டன், துபாய் முதலான நாடுகளின் விமான நிலையங்களிலெல்லாம் தரிக்கப்பட்டு, மார்ச் 31 ஆம் திகதியே இலங்கை வந்து சேர்ந்தது.

சடலத்தை அன்றிரவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஏப்ரல் 1ஆம் திகதி வவுனியா வந்தடைந்தபோது அங்கு இராணுவச் சோதனைச் சாவடியில் சடலத்தை யாழ் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதுடன் ஓர் இராணுவ அதிகாரியால், துப்பாக்கி அடிப்பாகத்தால் பெட்டி சேதமாக்கப்பட்டது.

வவுனியா அரசாங்கஅதிபர், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்குஇவ்விடயம் கொண்டு வரப்பட்டது. எனினும் குறிப்பிட்ட அதிகாரி தன் பிடிவாதத்தை விடவில்லையாம். அனுமதிக்காக வவுனியா ஆஸ்பத்திரி வைத்திய சாலையில் 3 தினங்கள் வைக்கப்பட்டிருந்தாலும், பெட்டி சேதமாக்கப்பட்டிருந்ததாலும் சடலம் பழுதடையத் தொடங்கியது.

இதனால் குறிப்பிட்ட மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சடலத்தைப் புகைப்படம் எடுத்து தாய், சகோதரர்களுக்குக் காண்பிக்க படப்பிடிப்பாளரைக் கூட்டி வந்தபோதும் அவ்வதிகாரி அனுமதி மறுத்து விட்டாராம். (39

## நிர்வாகசேவை விசேட பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் கடந்த வருடம் நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை (விஷேட) பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு!

ஏ. சுப்பிரமணியசர்மா திருகோணமலை, எஸ். சின்னையா திருகோணமலை டபிள்யூ. எஸ். பி பி. விஜேசூரிய திருகோணமலை, கே. கேதீஸ்வரன் யாழ்ப்பாணம், என். இந்துமதி கிளிநொச்சி, ஏ. இன்ஃராயர் திருகோணமலை, கே. ருபிணி கரம்பன் மேற்கு, கி. துரைச்சாமி மாதகல், எஸ். வி. சாந்தலிங்கம் கோவில்புதுக்குளம், ஏ. பத்மநாதன் பலாலிக்குளி அடம்பன், ஆர். ரவீந்திரன் இளவாலை, பி. போஜினி யாழ்ப்பாணம், என். தேவநாயகம் அளவெட்டி, டி. டி. விஜயலட்சுமி பரந்தன், எஸ். பிரபாகரன் யாழ்ப்பாணம், எம். ஏ. தஜசதீன் கிலாபத்துறை, ஆர். சுரேஸ்குமார் அச்சுவேலி, பி. பாலவடிவேல் நல்லூர் எஸ். நிஹிலா திருகோணமலை, எல். இளங்கோவன் யாழ்ப்பாணம், ரி. தனுஜா கோண்டாவில் கிழக்கு, ஆர். வரதீஸ்வரன் வதிரி, பி. செந்தில் நந்தனன் யாழ்ப்பாணம், செல்வி எஸ். கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம், எஸ். சக்திதரன் சுன்னாகம், ரி. ரூபவதி கிளிநொச்சி, எஸ். திருவாகரன் புலோலி, கே. சுவர்ணராஜா வவுனியா, ஜே. ஐ. பிரான்சிஸ் யாழ்ப்பாணம்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி இதற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பு பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்மாவட்டத்தில் இருந்து இந்த நேர்முகப்பரீட்சைக்கு செல்லத் தவறியவர்கள் யாழ் செயலகத்துடன் தொடர்பு கொண்டால் அரச அதிபரின் கடிதத்தைப் பெற்று இப்பரீட்சைக்கு தோற்றலாமென பொதுசன தொடர்புகள் அதிகாரி தெரிவித்தார். (66)

### தென்மராட்சி உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

தென்மராட்சிப் பகுதி கோட்டத்தனிப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாம் இடத்தைப்பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு

13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு-சாவகச்சேரி இந்துக்கல்லூரி பெண்கள் பிரிவு-கரம்பகுறிச்சி மகா வித்தியாலயம்.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு-மட்டுவில் மகா வித்தியாலயம். பெண்கள் பிரிவு-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு-மட்டுவில் மகா வித்தியாலயம் பெண்கள் பிரிவு-சாவகச்சேரி றிபேக் கல்லூரி (ப 32)

---

### சிறு விளம்பரம்

**சேவை**

உங்கள் பெறுமதி மிக்க புத்தகங்கள் கொப்பிகள் மற்றும் உங்கள் தொகுப்புக்கள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைன்டிங்) கட்டிக் கொடுக்கப்படும் நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த சலுகையில் வழங்கப்படும் மேலதிக விவரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை, 255 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 04036

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



---

1990 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர

மாணவருக்கான

"என் பெயர் கருணாநிதி. நான் ஒரு தேசவிரோதி!" என்று தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார் மு.க.

இடம்: பீஹார் மாநிலத் தலைநகர் பாட்னா.
சந்தர்ப்பம்: தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரத் துவக்கக் கூட்டம்.

வடமாநிலம் ஒன்றிக் கூட்டத்தில் கருணாநிதி பேசியது இதுவே முதல் தடவை. அவருக்கு ஹிந்தி தெரியாது. என்றாலும் அங்கு திரண்டிருந்த இரண்டு லட்சம் மக்கள் அவர் பேசுகையில் அடிக்கடி கைதட்டி ஆரவாரம் செய்தனர்!

எனக்குத் தேசத்ரோதி என்ற பட்டத்தைச் சூட்டியவர்கள் ராஜீவ் காந்தியும் சந்திரசேகருந்தாம் நான் சுவிற்சர்லாந்துக்குப் போனதில்லை. சுவிஸ் வங்கியில் எனக்குக் கணக்கும் இல்லை. எனக்கு இத்தாலி நாட்டுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஆயுதக்கடத்தல் காரரோடு விருந்துண்டதுமில்லை.

எனக்கு வயது 67. என் பொதுவாழ்வின் வயது 53 ஆனால் ராஜீவ்காந்திக்கும் தமிழ் நாட்டில் உள்ள அவரது அரசியல் நெநேதிக்கும் பொதுவாழ்வு வயது 10 கூட இருக்காது. அவர்கள் என்னைத் தேசவிரோதி என்கிறார்கள்!" என்று மு.க. சொன்னதும் மீண்டும் கரகோஷம்.


# ஜெசித்தாரா பல்பொருள் அங்காடி

உங்கள் இல்லத்தரசியின் மனை சிறக்க
தேவையான பொருட்களை வாங்கிச்செல்ல
ஒரு முறை நாடுங்கள்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிரில்
3A, கொழும்புத்துறைசாலை சுண்டிக்குளி.

04023


1990 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர
மாணவருக்கான

# இலவச கருத்தரங்கு

இடம்:- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்

**விஞ்ஞான பாடங்கள்**


| | | |
|---|---|---|
| 16-04-91<br>17-04-91 | காலை 9.00-12.00 | விலங்கியல்<br>திரு. நாகநாதன் |
| 16-04-91<br>17-04-91 | பிற்பகல் 2.00-4 30 | தூயகணிதம்<br>பிரபல ஆசிரியர் |
| 18-04-91<br>19-04-91 | பிற்பகல் 2.00-4.30 | தாவரவியல்<br>திரு. ஐங்கரநேசன் |

**கலை, வர்த்தக பாடங்கள்**

| | | |
|---|---|---|
| 16-04-91<br>17-04-91 | காலை 9.00-12.00 | கணக்கியல்<br>திரு. சிறி |
| 16-04-91<br>17-04-91 | பிற்பகல் 2.00- 4 30 | தமிழ்<br>திருமதி. மீரா |
| 18-04-91<br>19-04 91 | காலை 9.00-12.00 | பொருளியல்<br>திரு. வரதராஜன் |
| 18-04-91<br>19-04-91 | பிற்பகல் 2.00-4.30 | அளவையியல்<br>திரு. யுகபாலசிங்கம் |

## யாழ் றோட்டரக்ட் கழகம்

04061



## நவரட்ணம் லோகேஸ்வரி (தேவி)

வையகத்தில் அறிமுகம் 24-11 1963 — தெய்வத்தில் சங்கமம் 24-02-1988

திதி: 10-04-1991

தாரணியில் வந்துதித்த நிலவே
தேயும் நிலவென்று எண்ணி நாம் பார்த்ததில்லை
நினையாத நேரம் அணைந்த எம் ஒளி விளக்கே
நினைக்காத நேரமும் இல்லை — உன்னை
வாழ வேண்டிய நேரத்தில்
வாழ்விழந்து போன தேவியே!
மரணம் நிச்சயமே மறக்கத்தான் முடியவில்லை - ஆனால்
தருணம் இதுவல்ல தவிக்கின்றோம் உன் பிரிவால்!
பண்பான வார்த்தைகளும் இளமைத் தோற்றமும்
கண்ணிறைந்து நிற்குதம்மா!
இதயங்கள் வெடிக்குதம்மா!
வேதனையால் வாடுகின்றோம்
கண்ணீரைக் கடல் ஆக்கி
காலமெல்லாம் கதறவைத்த
கல்லான கடவுள் இடம்
கதறித்தான் வேண்டுகின்றோம்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

சேரதீவு வீதி,
தலைகிளப்பு,
சாவகச்சேரி.

அன்பு, அப்பா, அம்மா, அண்ணன்,
தம்பி, அக்கா, தங்கைகள், உறவினர்,
நண்பர்கள்.

04052

# கிளிநொச்சிக்கு ச்செஞ்சிலுவை எடுத்து வந்த மருந்துகள் வவுனியாவில் ராணுவத்தால் தடை

செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திற்கென கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட அத்தியாவசிய மருந்துகள் யாவும் வவுனியாவில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு சிரமங்களுக்கிடையே கிளிநொச்சிச் செஞ்சிலுவைச் சங்கக்கிளை இம் மருந்துகளைக் கொண்டுவந்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இம் மருந்துகள் மிக மிக அத்தியாவசியமானவை. நோயாளர்களுக்கு வழங்க மருந்து வகைகளுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவும் இந்நேரத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி மிக்க இவை தடுத்து வைக்கப்பட்டிருப்பது கண்டனத்துக்கும் கவலைக்கும் உரியது எனத் தெரிவிக்கப்படுகிறது. (35)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### அகத்துறை - ஒரு குறிப்பு

ஆசிரியர்,
முரசொலி.

வடக்கே வெளிவரும் நாளிதழ்களுள் பண்பாட்டுத்துறைக்கும் இடமளிக்கும் ஒரே பத்திரிகை என்ற பாராட்டுக்குரியது 'முரசொலி.'

மணிவாசகர் வாக்கில் முதலில் உதித்தது திருவாசகமா, திருக்கோவையா என்ற பொருள்பற்றி ஒரு சிறு குறிப்பு வெளியிட்டிருந்தீர்கள்.

சரவண முதலியாரோ, அவர் மைந்தன் அ.ச.ஞானசம்பந்தனோ சமயத்துறையில் எடுத்துக் காட்டத் தகுதியுடைத்த ஆராய்ச்சியாளர் அல்லர் 1955 இல் வேலணையில் நடந்த திருமுறை விழாவில் Sir Oliver Lodge, Sir James Jeans முதலிய பௌதிகவியல் அறிஞர்களின் கருத்தை இணைத்துப் பேசிய ஞானசம்பந்தனைக் குறித்து. பௌதிகவியல் மேதை கந்தையா. "இவர்கள் சமயத்தையும், இலக்கியத்தையும், பௌதிகவியலையும் பழுதாக்காமல் இருப்பது நலம்" என்றார்.

அகத்துறை இலக்கியம் சுட்டும் ஆன்மீக அநுபவ நிலையை உணரும் பாங்கைத் தமிழகம் என்றோ இழந்து விட்டது. இந்திய 'மிசேச்சர்' எனக் கூறும் மேனாட்டினர் கூட இம் மரபை அழியாது பேணிவருகின்றனர். சாலமோன் மன்னரின் "உந்நத சங்கீதம்" பற்றிச் சென்னைக் கத்தோலிக்கத் தமிழ் பைபிளில் "இது தமிழ் நாட்டு அகத்துறைப் பாடல்களை ஒத்தது" என்ற குறிப்பைக்காணலாம்.

புனித அவிலா தெரேசாள், புனித சிலுவை அருளப்பர் இம் மரபைப் பேணி யாத்த செய்யுள்கள் இம்மரபு வரலாற்றுக் காலத்திலும் அழியாதிருப்பதைக் காட்டும். விசேடமாக அருளப்பரின் ஆன்மீகப் பாடல்களும் அவை சுட்டும் அநுபவம் பற்றிய விளக்கமும் நம்மவரின் கண்களைத் திறக்கும். மணிவாசகரது பழுத்த அநுபவத்தின் பிழிவே திருக்கோவையார். திருவாசகத்தில் இடையிடையே வரும் அகத்துறையனுபவம் இதில் பூரணமாக வெளிப்படுகிறது. இதை வெறும் 'இலக்கியக்கலை'க் கண்கொண்டு பார்ப்போர் குருடரே.

கரம்பன். —ஆ சபாரத்தினம்.

## வடகிழக்கு அகதிமுகாம்களைப் பராமரிக்க இந்தியா 320 லட்சம்ரூபா நிதிஉதவி

வடகிழக்கு மாகாண அகதிகளுக்காக நிறுவப்பட்டிருக்கும் அகதிமுகாம்களைப் பராமரிப்பதற்கு இந்தியா 320 இலட்சம் ரூபா உதவியளிப்பதற்கு [illegible] ஊடாகவும், இவ்வுதவியின் முதற்கட்டம் ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்தியத் தூதரக அதிகாரி திரு. எம். பி. சிங். தெரிவித்தார்.

## ஏப்.23 முதல் மே 18 வரைஉயர்தரப்பரீட்சை: அனுமதி அட்டை இவ்வாரம் விநியோகம்

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர விசேட பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி முதல் மேமாதம் 18ஆம் திகதிவரை நடைபெறும் எனநேற்று இலங்கை வானொலி அறிவித்தது.

வடக்கு கிழக்கில் மொத்தம் 144 நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையும் நேரசூசிகையும் அந்தந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர்களின் மூலம் இவ்வாரம் விநியோகிக்கப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மிளகாய்ச் செய்கை பாதிப்பு

அச்சுவேலிப்பகுதியில் செய்கைபண்ணப்பட்ட மிளகாய்ச் செடியில் முறுகல் நோய் வேகமாகப் பரவி வருகின்றது. இருமிநாசினிகள் விலை அதிகரித்துள்ள இந்த வேளையிலும் இவற்றை வாங்கித் தெளித்தும் பலன் ஏற்படாததால் விவசாயிகள் கவலையடைகின்றனர்.

இந்நோய் மிளகாய்ச் செடியின் ஆரம்பத்தில் இலைகள் முறுகி பின் படிப்படியாக குருத்துக்கள்கருகி இறுதியில் செடியே கருகிவிடுகிறது. (ப-24)

### வைத்திய அதிகாரி நியமனம்

வேலணைப் பிரதேச சபை புங்குடுதீவு உப- அலுவலகத்தில் இயங்கிவந்துள்ள அரசினர் ஆயுர்வேத வைத்திய சாலைக்குப் புதிய வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கச்சாய் உப- அலுவலகத்தில் கடமையாற்றிய கே. பாலசுப்பிரமணியம் தற்போது புதிய வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (20)

### இடம் பெயர்ந்தோர் மாறினர்

இளவாலை செனட். யூட்ஸ் தேவாலய பகுதியில் [illegible]

### செல்வநாயகம் நினைவுபபேருரை

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 11-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை (7) புவியியற்றுறைத் தலைவர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஆரம்ப உரையும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுக உரையும் நிகழ்த்துவார்கள்.

'தமிழரின் பாரம்பரிய மருத்துவம்' என்னும்பொருள் பற்றி இளி. விவசாய உயிரியற்றுறை தலைவரும் பயிர்ச் சுகவியற்துறை பதில் தலைவருமான கலாநிதி பாலசிவகடாட்சம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

### முறைசாரா செய்முறைப்பரீட்சை

முறைசாரா க் கல்விப் பிரிவில் 1990ஆம் ஆண்டுக்கான குளிரூட்டல் சுற்றுப் பதனிடுதல் பயிற்சிக்கான செய்முறைப் பரீட்சை 10ஆம் திகதி காலை 8 மணிக்கும், அறிமுறைப் பரீட்சை 11 ஆம் திகதி காலை 8 மணிக்கும் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### நீர்வேலி கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்

"இந்தியா தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தவே இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் முயன்றது" என காமினி நவரட்ன 'சண்டே ஒப் சேவருக்கு' எழுதிய கட்டுரையில் கூறுகிறார். அக்கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

## போன மச்சான் திரும்பி வந்தான்

இலங்கை- இந்திய ஒப்பந்தமானது ஜெயவர்த்தனா அரசுக்கு இந்தியாவினால் வற்புறுத்தித் திணிக்கப்பட்டதொன்றாகும்.

இதற்குப் பதிலாக ஒரு நட்புறவு ஒப்பந்தம் இரு நாடுகளும் செய்து கொள்ள வேண்டுமென இன்றைய ஜனாதிபதி பிரேமதாஸ விரும்பினார்.

ஆனால், இந்த நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடக் கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

இவ்வொப்பந்தம் சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையில் ராஜதந்திர மட்டத்தில் நிகழ்ந்த கருத்துப் பரிமாறல்கள் நம்பிக்கையூட்டுவனவாக அமையவில்லை.

இதற்கு முக்கிய காரணம், இந்தியா தான் நினைத்தவாறு ஒப்பந்தம் அமைய வேண்டுமென விரும்புவதாகும்.

இந்தியாவினால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் ஒப்பந்தம் இலங்கையின் தேசிய நலன்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தம் பற்றிக் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தூதுவர் டொக்டர் ஸ்ரானிலி கல்பகே "இது ஒரு நடுநிலையற்ற, பக்கச் சார்பான ஒப்பந்தம். இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நகல் ஒப்பந்தத்தில் நட்புறவைத் தோற்றுவிக்கக் கூடிய அம்சங்களே இல்லை" எனக் கூறினார்.

அவர் இந்த நகல் ஒப்பந்தம் பற்றி மேலும் குறிப்பிடும் பொழுது, "இந்தியா தனது செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் தெற்காசியப் பிராந்தியத்தில் ஸ்திரப் படுத்தவே இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும். இலங்கையுடனான நட்புறவைப் பேணவோ, ஊக்குவிக்கவோ இது வழிவகுக்காது" என்றார்.

1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பு ரஜீவ் காந்திக்கும் ஜெயவர்த்தனாவிற்குமிடையில் இருகடிதங்கள் பரிமாறப் பட்டன. இந்த இரு கடிதங்களும் இலங்கையின் தலைவிதியை நிர்ணயித்தன.

இலங்கை அரசுக்கும், தமிழ்ப் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற போரில், சமாதானத் தூதுவன் என்ற போர்வையில் தலையிட்ட இந்தியாவின் உள்நோக்கம் தென்பிராந்தியத்தில் தனது நிலையை வலுப்படுத்துவதேயாகும்.

இஸ்ரேல், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சார்ந்த உளவு அதிகாரிகள் இலங்கையில் இருந்து ஆலோசனை வழங்குவதை இந்தியாவுக்குப் பிடிக்கவில்லை. சீனாவிடமிருந்தும், பாகிஸ்தானிடமிருந்தும் இலங்கை ஆயுதம் கொள்வனவு செய்ததும் இந்தியாவுக்கு உறுத்தியது.

தருணம் பார்த்து இந்தியா கையைவைத்தது. ஒப்பந்தம் ஒரு சாட்டாக அமைந்தது. ஜெயவர்த்தனா சற்றும் எதிர்பாராத வகையில் மடக்கப்பட்டார்.

இந்தியா துருப்புக்களை அனுப்பியது. அனுப்பியதின் நோக்கம் நிறைவேறவில்லை. விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட பெரும் இழப்புகளுடன் 1989 இல் இந்தியத் துருப்புக்கள் இந்தியா திரும்பின.

இந்தியாவின் மீள வருகை போன மச்சான் திரும்பி வந்தான் என்ற கதை போலாகின்றது.

தமிழில்: வி.பி.

## கோலாலம்பூர் ஆசிய களப்போட்டிகளில் ஈராக் கலந்து கொள்ளத் தடை!

கோலாலம்பூரில் ஒக்டோபர் மாதம்19 ஆம்திகதி முதல் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய தடை மற்றும் களப் போட்டிகளில் ஈராக் கலந்து கொள்வதற்கு [illegible]

டோக்கியோவில் இடம் பெற்ற போட்டி ஆயத்தக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூட்டு ஏற்பாட்டுக் கமிட்டி அறிவித்தது [illegible]

வடகிழக்கு மாகாண அகதிகளுக்காக நிறுவப்பட இருக்கும் அகதிமுகாம்களைப் பராமரிப்பதற்கு இந்தியா 320 இலட்சம் ரூபா உதவியளிப்பதற்கு முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுதவி பணமாகவும், பொருளாகவும் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இந்திய தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வடகிழக்கு அகதிகளுக்கு இந்தியா ஏற்கனவே உதவ ஒப்புக்கொண்ட தொகையில் மீதி ரூபா 5080 இலட்சம் இருக்கின்றது. இந்த 320 இலட்சமும் மேலதிக உதவியாகும் இவ்வுதவி ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தினூடாகவும், இவ்வுதவியின் முதற்கட்டம் ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்திய தூதரக அதிகாரி திரு. எம். பி. சிங். தெரிவித்தார்.

## உங்களுக்கு உரியதா?

மயிலங்கூடலைச் சேர்ந்த நாகன் சுப்பன் என்பவருடைய மரண அத்தாட்சிப் பத்திரமும், மற்றும் முக்கிய கொடுப்பனவு ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டு ஊரசேரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆசிரிய பீடத்தில் ஆதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

நியமனம் பெற்றுள்ளார்.

(20)

## இடம் பெயர்ந்தோர் மாறினர்

இளவாலை செனிட். யூட்ஸ் தேவாலயத்தில் தங்கியிருந்த வலி வடக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு உயரப்புலம் என்ற இடத்திலுள்ள தனியாருக்கு சொந்தமான காணியில் தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு அங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகள் கடந்த வருடம் ஜூன் மாத நடுப்பகுதியில் தங்கள் சொந்த இடங்களில் இருந்து வெளியேறி மேற்படி தேவாலயத்தில் இதுவரை காலமும் தஞ்சமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (13)

8 மணிக்கும் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## நீர்வேலி கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலைய வருடாந்த மஹோற்சவம் 10ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இருபது நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இத்திருவிழாவில் 27 ஆம் திகதி காலை தேரும், 28 ஆம் திகதி தீர்த்தமும் இடம்பெறும்.

கோலாலம்பூரில் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய தடை மற்றும் களப் போட்டிகளில் சுராக் கலந்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோவில் இடம்பெற்ற போட்டி ஆயத்தக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்டு ஏற்பாட்டுக் கமிட்டி அறிவித்துள்ளது. (16)

## தீவுப் பகுதி அம்புலன்ஸ் படகுச்சேவை விரைவில் ஆரம்பமாகும்

தீவுப்பகுதியில் அம்புலன்ஸ் படகுச்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய நிதியில் புதிய அம்புலன்ஸ் படகொன்று தற்பொழுது கட்டப்பட்டு வருகின்றது:

பதினேழு லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் இந்த அம்புலன்ஸ் படகு விரைவில் இங்கு தருவிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.


## "தேவி" கிறைண்டிங் மில்

மிளகாய்த்தூள், வேறு ஏனைய மாப்பொருள்கள் அரைப்பதற்கு மின்சாரம் இன்றிக் கஷ்டப்படும் பொது மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு

நேரம்: தினமும் காலை 9.00 — மாலை 5.00 மணி வரை

செத்தல் அரைப்பதற்கு கிலோவிற்கு ரூபா 30,00. ஏனைய மா வகைகளுக்கு கிலோவிற்கு ரூபா 8.00 ஆகவும் அறவிடப்படும்.

இடம்: வதிரிச் சந்தியிலிருந்து திக்கம் வீதியில்

04058


## குடிநீர் சீர்கேடாகவுள்ள யாழ்மாநகரப் பகுதிகளில் குழாய்க்கிணறுகளை உடன் அமைக்க யுனிசெப் உதவி

யாழ் மாநகர சபை எல்லைக்குள் "குடிதண்ணீர்" சீர்கேடான இடங்களில் 'குழாய்க் கிணறு' அமைப்பதற்கு யாழ் மாநகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குடிதண்ணீர் சீர்கேட்டால் பல இடங்களில் குடல் சம்பந்தமான, நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவி வருகின்றது.

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட குறிப்பிட்ட இடங்களில் இந்நோய்கள் மிகவேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனாலேயே உடனடித் தேவைக்காகக் "குழாய்க் கிணறு" அமைக்கப்படவுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் ஆரம்ப கட்டமாக குறிப்பிட்ட ஐந்து பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரமளவில் அப்பகுதிகளில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

'யுனிசெப்' இன் ஆதரவிலேயே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## கௌபி பயிர்ச்செய்கைக்கு சில அறிவுறுத்தல்கள்

"கௌபி" பயிர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளே உங்கள் விவசாய நிலங்களில் பசளைத் தன்மை குறைவதால் அப்பயிர் கொடி விட்டு வளரக் கூடியதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. என யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கே. குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

எனவே இத்தக்கொடிகளை நுள்ளி விடுவது அவசியம். இல்லையேல் விளைவைக் குறைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப்பயிர் சம்பந்தமான ஆலோசனைகளுக்கு தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் பகுதிப் போதனாசிரியர்களோடு தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (33)

## முல்லைத்தீவு தபால்கள் வவுனியாவில் தேக்கம்

வவுனியாவில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை காரணமாக முல்லை மாவட்டத்துக்குரிய தபால் பொதிகள் கடந்த ஒரு மாத காலமாக வவுனியா தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் வாரத்தில் இரண்டு தடவைகள் முல்லை மாவட்டத்துக்கும் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இப்பொதிகள் எடுத்துவரப்படும் போது இராணுவத்தினரால் வெட்டப்பட்டுசோதனையிட்டுவரப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (33)

## தென்மாகாணத்தில் தமிழ்த்தினப் போட்டி

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி தென்மாகாணத்தில் ஜின்தோட்டை ஸாஹிரா மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் பிரதம அதிதியாக கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவின் பணிப்பாளர் திரு. வே. சபாநாயகமும், திருமதி புஷ்பவதி சபாநாயகமும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவை பரிச்சயமில்லை எனவும் பணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு இவற்றில் போதிய பயிற்சி அளிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டது. (74)

## எரிபொருள் நிலையத்துக்கு அனுமதி நீதி மன்றம் தடையுத்தரவு

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் என்பதால் அவரது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அனுமதி வழங்காதது அடிப்படை மனித உரிமை மீறல் என்று உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஏ. எம் ராஸிட் என்பவரே இவ்வாறு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர், மூன்றாவது மற்றொரு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஆகியோரே இம்மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டவர்களாவர்.

மனுவை விசாரணைக்கு எடுத்த மூன்று நீதியரசர்கள் மூன்றாவதின் எரிபொருள் நிலையத்துக்கு அனுமதி வழங்குவதை விலக்கி வைக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு இடைக்கால கட்டளை பிறப்பித்துள்ளனர். (33)

---

**தொழிலாளர்...**

நடாத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இத்தொழிலாளர் கல்வி நெறிக்கு 260 பேர் பதிவு

---

**அன்னை...**

இக்கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகளும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு

# அதிபர்கள் பட்டியல்களை அனுப்பாததால் முத்திரைக்குப் பொருள் வழங்கத் தாமதம்

பாடசாலை அதிபர்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைக்கான பட்டியல்களை உரிய காலப் பகுதியில் பல நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பிவைக்காமையினாலேயே இவ் விநியோகம் தாமதமடைவதாகக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு பொருள்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து எமது செய்தியாளருக்கு சுன்னாகம் பல நோ. கூ. சமாசத் தலைவர் விளக்கமளிக்கையில் இக் கல்லூரி மார்ச் மாதம் 28-ம் திகதியே இப்பட்டியலைத் தமக்கு அனுப்பிவைத்ததாகத் தெரிவித்தார்.

உடுவில் அமெரிக்க மிசன் பாடசாலைக்கு அண்மையில் கிளை இல 15, உடுவில் முருகமூர்த்தி பாடசாலைக்குப் பக்கத்தில் கிளை இல 8 இருந்த போதும் இப்பாடசாலைகளும் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள கிளை 7 க்கே முத்திரைகளை வழங்கியுள்ளன.

இதேவேளை இக்காலப்பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கான 8 ஆம் புள்ளி உணவு முத்திரைக்கான பொருள்களும், 7 ஆம் கட்ட உலர் உணவு நிவாரணப் பொருள்களும் விநியோகம் செய்யவேண்டியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டால் மதிய உணவு முத்திரைக்கான பொருள்களை எவ்வித தாமதமோ தடையோ இன்றி வழங்கக்கூடியதாகவிருக்குமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (66)

## ஒயிலில் கலப்படம் படகு இயந்திரங்கள் பழுது

குருநகர்ப் பகுதியில் உள்ள தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் ஒயிலில் கலப்படம் செய்யப்பட்டு உள்ளதாகவும் இதனால் இதனைப் பாவிக்கும் வெளியிணைப்பு இயந்திரங்கள் விரைவிலேயே பழுதாகுவதாகவும் மீனவர்கள் கவலையுடன் புகார் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெயுடன் இதில் கலந்து ஒயில் என விற்பனை செய்யப்படுவதாகவும் இது ஒரு போத்தல் 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையான கலப்படமற்ற ஒயிலும் போத்தல் இதே விலையாகவே விற்பனை செய்யப்படுவதாகவும் இது கடும் சிவப்பு நிறமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-17

## ஐ. தே. க. பிரசாரம் குறித்து ஜனாதிபதி அறிவுறுத்தல்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியாக பிரசாரம் செய்யக் கூடாது என்று ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர்களுக்கும் அரசசார்பு எம்பிக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

ஒருசில அபேட்சகர்களுக்கு தனிப்பட்டமுறையில் செல்வாக்கை ஏற்படுத்த சிலர் முனைவதாக வந்த புகார்களையடுத்தே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கொள்கைக்கே பிரசாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளார். (33)

## கடன்வழங்கு சபையின் பணம் ஆசிரியர்கள் பெறமுடியாத நிலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரிய சேவை செய்து இடமாற்றம் பெற்று பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவுக்கு வந்துள்ள ஆசிரியர்கள் நீண்ட காலமாகக் கடன் வழங்கு சபையினால் வழங்கப்பட வேண்டிய பணத்தைப் பெற முடியாது பெரும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இவ்வு கடமையாற்றிய நீண்ட காலமாகப் பெறமுடியாது ஆசிரியர்கள் திண்டாடுகின்றனர்.

முல்லைத்தீவுக்குச் சென்று வேண்டுகோள் விடுத்தும் இதுவரை ஆவணங்களை அனுப்பிவைக்கவில்லையாம் (12)

---

**மன்னார்...**

வெளியேறிய படையினர்சிறு

## ஈச்சிலம்பத்தையில் ஒரு மைலுக்கு தமிழர் வீடுகள் எரிப்பு

திருமலையில் உள்ள 52ஆம் கட்டைக்கும் பூமரத்தடிச் சேனைக்கும் இடையில் உள்ள தமிழ் மக்களின் குடிமனைகள் அனைத்தும் ஈச்சிலம்பத்தை ராணுவத்தால் எரிக்கப்பட்டுள்ளன.

சுமார் ஒருமைல் தொலைவுக்கு இவ்வாறு வீடுகள் எரிக்கப்பட்டதால் அப்பகுதி வெளியாகக் காணப்படுகிறது

இதேவேளை ஈச்சிலம்பத்தை படையினர் இரு பெண்களை பூநகர் பாடசாலையில் வைத்து சுட்டுக் கொன்றனர். வெருகல் முகத்துவாரத்தில் இருந்து அலிஒலுவவுக்கு மீன்வாங்கச் சென்ற ஆறு தமிழர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (71

## வவுனியா செல்ல வேண்டாமென அமைச்சர் குழுவுக்குத் தடை

வவுனியா நகருக்கு வரவிருந்த அமைச்சர் மட்டக்குழு தமது விஜயத்தைப் பின் போட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் வவுனியா நகருக்கு வரவிருந்த இந்தக்குழுவில் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி, ஹேமா பிரேமதாஸ, இராஜ மனோகரி புலேந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நகரில் சிவில் நிர்வாகம் மற்றும் கல்வி நடவடிக்கை ஒழுங்குகளை மேற்கொள்ளவே இவர்கள் வரவிருந்தனர்.

வவுனியாவில் பரவலாக மோதல்கள் நடைபெறுவதால் தற்போது அப்பகுதிக்கு செல்வது பாதுகாப்பற்றது என்று கூறிப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இவர்களைத் தடுத்ததாகக்கொழும்பு செய்திகள் தெரிவித்தன,

## கேரதீவில் அதிக விலையில் சுகாதாரமற்ற உணவுப் பொருள்!

கேரதீவு இறங்கு துறையில் அமைந்துள்ள தேநீர்க் கடைகள் சுத்தமற்றநிலையில் தின்பண்டங்களை விற்பனை செய்து வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கடைகளில் உள்ள உணவுப் பண்டங்கள், தேநீர் மீது "ஈக்கள்" மொய்க்கின்றன. ஆனால் இந்த உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (ப 11)

## ஆபாசப்படம் பார்த்த 40 மாணவர்கள் கைது

பதுளை நகரில் உள்ள திரையரங்கு ஒன்றில் 'அடல்ஸ் ஒன்லி' படம் பார்த்த நாற்பது பாடசாலை மாணவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

பட்டனர்.

தியேட்டர் முகாமையாளரும் எச்சரிக்கப்பட்டார். 74)

---

**கருத்தரங்கு**

பகுத் தலைவர், முன்னாள

## தொழிலாளர்...

நடாத்த தீர்மானித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொழிலாளர் கல்வி நெறிக்கு 260 பேர் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஈ-11)

## சுடுமணலினுள்...

ளது. அதனுள் குழந்தை விழுந்து துடிதுடித்து இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப 35)

## வவுனியா...

இதேபோல கன்னாகம் பல நோ. கூ. சங்க செயலாளர் நான்கு கொழும்புக்குச் சென்று ஒருமாதகாலமாகியும் இன்னும் திரும்பி வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## 88 இலங்கை...

செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை தொடர்ந்து மீனவர்களை மாலைதீவுக்கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ளனர். (33)

## அன்னை...

இக்கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகளும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

## காரைநகரில்...

பேர் உடல் சிதறிப் பலியானார்கள் நான்கிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மேலும் இரண்டு இனம் தெரியாத வயோதிபரது சடலம் கனபூமிப்பகுதியில் கிடப்பதாக தெரியவருகிறது. (ப-31, ப-1, 12

## பிரதேச...

தாக அமைச்சின் சுற்று நிருபம் தெரிவிக்கிறது.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளின் பிரதேச செயலாளர்களின் பெயர் இனிமேல் பிரதேச செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர் என வழங்கப்படும் எனவும் பெயர் மாற்றத்தால் அவர்களின் கொடுப்பனவுகளில் எவ்வித மாற்றமும் இருக்காது எனவும் மற்றொரு சுற்று நிருபம் தெரிவிக்கிறது.

வந்துள்ள ஆசிரியர்கள் நீண்டகாலமாக கடன் வழங்கு சபையினால் வழங்கப்பட வேண்டிய பணத்தைப் பெற முடியாது பெரும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களது ஆவணங்களை பண்டத்தரிப்பு கோட்டத்திற்கு முல்லைத்தீவு கல்வித் திணைக்களம் அனுப்பாததாலேயே இந்தப் பணத்தை

## தமிழர்...

எனச் சுட்டிக்காட்டினார். அரச தமிழர் போராட்டத்தை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாது என உணர்ந்துவிட்டது. எனினும் தமிழர் உரிமையை ஏற்க அது மறுத்துவருகிறது.

இதை உலக அரங்கில் எடுத்துக்காட்ட அரசுடன் நாம் நடாத்தும் பேச்சுவார்த்தை உதவலாம் எனவும் திலகர் தெரிவித்தார்.

இட்டு தெரிவித்த தமிழ் மக்களின் மனநிலையை அறிய சர்வஜன வாக்கெடுப்பு யோசனையையும் திலகர் தனது பேட்டியில் மேற்கோள் காட்டினார்.

## வீரமரணம்...

1 மணிக்கு கோப்பாய் மாவீரர் மயானத்தில் இவரது உடல் தகனம் செய்யப்படும். (70

வேண்டுமென விடுத்தும் இதுவரை ஆவணங்களை அனுப்பிவைக்கவில்லையாம் (12)

## மன்னார்...

வெளியேறிய படையினர் சிறுநாவற்குளம் நாகதாழ்வு ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ளனர்.

மற்றைய முனையில் தள்ளாடி முகாமில் இருந்து 2 பவள்கவசவாகனம் 2 ஆர்மட் கார் 2 லொறி ஆகியவை சகிதம் வெளியேறிய படையினர் ஒன்றரைமைலில் உள்ள முள்ளிப்பத்தையை வந்தடைந்தனர்.

இங்கிருந்து படையினர் மாந்தையை நோக்கிச்சென்று கொண்டிருந்த போது 600 யார் தூரத்தில் வைத்து விடுதலைப்புலிகள் இவர்கள் மீது ஆர். பி. ஜி கல்கனைரோ தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் படையினர் பின்வாங்கினர். சேதமடைந்த லொறி ஒன்றும் ஆர்மட்கார் ஒன்றும் பலத்த சேதமடைந்த நிலையில் கட்டி இழுத்துச் செல்லப்பட்டன.

இத்தாக்குதல்களையடுத்து நேற்றும், நேற்று முன்தினமும் அவ்ரோ விமானம் மாந்தைப் பகுதியில் பீப்பாய் குண்டுகளை வீசியது. (71)

# 40 மாணவர்கள் கைது

பதுளை நகரில் உள்ள திரையரங்கு ஒன்றில் 'அடல்ஸ் ஒன்லி' படம் பார்த்த நாற்பது பாடசாலை மாணவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

படம் ஓடிக்கொண்டிருந்த போது தியேட்டர் சுற்றி வளைக்கப்பட்டே இவர்கள் கைதானதாக தெரிவிக்கப்படுகிறது.

மறுநாள் காலை பெற்றோர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு புத்திமதிகளுடன் இம்மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தியேட்டர் முகாமையாளரும் எச்சரிக்கப்பட்டார். 74)

## குறிகாட்டுவான்...

எழுவைதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தனித்தனியாக எழுதிய மகஜர்களை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

நேற்று இப்பகுதியில் எந்த வொரு படகுச் சேவையும் நடைபெறவில்லை. (20)

## வடகடலில்...

பட்ட போதும் எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரையில் காணப்பட்ட பல பனை மரங்களை துப்பாக்கிச் சன்னங்கள் பதம் பார்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## கருத்தரங்கு

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் "சூழற் சுகாதாரமும் தொற்று நோய்த்தடையும்" என்னும் பொருள் பற்றி வட்டுக்கோட்டை சுகாதார உதவியாளர் எஸ். சிவனேசராசா கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளார். (12)

## வங்கி அலுவல் நேரம் நீடிப்பு

இலங்கை வங்கி யாழ்கிளை வாடிக்கையாளர் நலன் கருதி தனது அலுவல் நேரத்தைக் காலை 9 மணி முதல் பகல் 10 30 மணி வரை நீடித்துள்ளது.

## சிறுவன்...

ஆசிரியைகள் மூவர் பாலியல் ரீதியாக பலாத்காரம் பிரயோகித்ததால் அவன் காயப்பட்டதாகவும், முதலில் பருத்தித்துறைப் பகுதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கன்னியங்காடு டச்சு வீதி லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 10-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.